## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 52/2018

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 13 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 13.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வீரப்பன் (PW–1) | வயது | : | 53/2025 |
| க/த பெயர் | : | திரு. ராமசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது அம்மா தாக்கல் செய்தார். எனது அம்மா என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனது அம்மா சொத்தை பிரதிவாதி எழுதி கொண்டதால் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தார். நான் தான் எனது அம்மாவிடம் இந்த வழக்கை தாக்கல் செய்ய சொன்னேனா என்றால் இல்லை, எனது அம்மாவே வழக்கை தாக்கல் செய்தார். சொத்தை பிரதிவாதியிடம் எழுதி கொடுத்த எனது அம்மா இறந்துவிட்டதால் அந்த சொத்து குறித்து எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

2) எனது அம்மா எப்போது இறந்தார் என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, 2021 இல் இறந்தார். வா.சா.ஆ–5 ஆவணமான எனது அம்மா உயில் எழுதி வைத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் எனது அம்மா இறந்த பின்பு தயார் செய்யப்பட்டதா என்றால் அதற்கு முன்பே எழுதப்பட்டது. அந்த உயிலானது எனது அம்மா இறப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு எழுதப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எனது அம்மா எத்தனை மாதங்களாக படுத்த படுக்கையாக கிடந்தார் என்றால் 2 மாதங்களாக கிடந்தார்.

3) அந்த உயிலானது எனது அம்மா இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ–5 உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை, எனது அம்மாவின் கையெழுத்து. 2 மாதமாக மரண படுக்கையில் கிடந்த எனது அம்மாவால்

உயில் ஆவணத்தில் உள்ள விபரங்கள் சொல்லியது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டார்கள் என்றால் மூன்று பேர் கையெழுத்திட்டார்கள். **(தற்போது சாட்சியானவர் இரண்டு பேர் கையெழுத்திட்டதாக சொல்கிறார்).** யார் யார் கையெழுத்திட்டார்கள் என்றால் ரமேஷ், அபுதாஹீர் ஆகியோர் கையெழுத்திட்டார்கள். ரமேஷ் அண்ணன் பெயர் செந்தில் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

4) அபுதாஹீர் என்பவர் உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள முகவரியில் அது போன்ற நபரே இல்லை என்றால் சரியல்ல, தற்போது வீடு மாற்றிக்கொண்டு மதுரையில் உள்ளார். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.5 ஆவணத்தில் 3 பக்கங்களில் உள்ள கையொப்பமானது வெவ்வேறாக இருப்பதால் மேற்கண்ட கையெழுத்தானது எனது அம்மா போட்ட கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

5) எனது அம்மா இரண்டு மாதமாக படுத்த படுக்கையில் கிடந்தபோது நோட்டரி பப்ளிக் வழக்கறிஞரிடம் எவ்வாறு வந்தார் என்றால் மன்னார்குடி வந்து கையெழுத்து வாங்கி சென்றார். வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் ஏற்கனவே எனது அம்மா செட்டில்மெண்ட் ஆவணமாக அவரது வாரிசுதாரர்கள் எல்லாருக்கும் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது அம்மா இறந்தபிறகு அவரது வாரிசுதாரர்களில் ராஜலட்சுமியை விட்டுவிட்டு வாரிசு சான்று வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, ராஜலட்சுமியை வாரிசுதாரர் என்று தான் வாரிசுசான்று வாங்கபபட்டது.

6) எனது அம்மாவிற்கு யார் யார் வாரிசுதாரர்கள் என்றால் ரவிச்சந்திரன், கோமதி, வீரப்பன், ராதாகிருஷ்ணன், ராஜலட்சுமி. இந்த வழக்கில் எனது அம்மாவின் வாரிசுதாரரான ராஜலட்சுமியை விட்டுவிட்டு இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். 1ம் வாதியின் வாரிசுதாரரான ராஜலட்சுமியை தவிர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் அனைவருக்கும் எந்த வருடம் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எனது அம்மா எழுதி கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. அதே தேதியில்தான் எனது அம்மா பிரதிவாதிக்கும் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது.

7) 2016 இல் எழுதப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது அம்மா கைரேகை மட்டும்தான் வைத்துள்ளார் என்றால் சரிதான். 2016 இல் எழுதப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது அம்மா கைரேகை மட்டும் வைத்தவர், உயில் எழுதும்போது கைரேகையுடன் கையொப்பமும் சேர்த்து போடப்பட்டதால் அந்த உயில் ஆவணத்தில் உள்ள கைரேகை மற்றும் கையொப்பமானது எங்களால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8) 2016 இல் எனது அம்மா அனைவருக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் அனைத்ததையும் பின்னாளில் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். 2018 இல் மீண்டும் எனது அம்மாவை அழைத்து சென்று பிரதிவாதியை விட்டுவிட்டு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல.

**பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:24:15 +0530

District Munsif
Mannargudi.